Registeardas a NewsPaper பக்கங்கள் 06 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 02 (15-03-1992) ஞாயிற்றுக்கிழமை ஓசை: 26

## மாணவர்மதியஉணவுக்கு ஹைலான்ட் மா அனுமதி

மில்கோ தயாரிப்பான ஹைலான்ட் பால் மாவைப் பாடசாலை மாணவர்களின் மதிய உணவுக்கு வழங்க அமைச்சரவை அனுமதித்துள்ளது. இந்த மா ஜனசக்தி நன்மைகளைப் பெறுபவர்களுக்கும் கூட்டுறவுக் கடைகள் மூலம் வழங்கப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் றணில் விக்கிரமசிங்கா தெரிவித்தார். உள்ளூர் பால் உற்பத்தியாளரிடமிருந்து பெறப்படும் பாலைக் கொண்டு ஹைலான்ட் (6ஆம் பக்கம் பார்க்க)

# வட-கிழக்கு இணைப்பு பிரச்சினை பாரா ளு. தெரிவு குழுவினுள் இழுபறி

(கொழும்பு)

தமிழர் தேசிய இனப் பிரச்சினை தொடர்பான பரிந்துரைகளையும், சாட்சியங்களையும் ஆராய்ந்து வரும் பாராளுமன்ற தெரிவுக் குழுவிற்கு வடக்கு, கிழக்கு இணைப்பு விவகாரத்தில் கருத்து வேற்றுமை மேலோங்கியுள்ளதாக கொழும்பு அரசியல்வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது. இதன் காரணமாக ஏப்பிரல் மாதத்தில் சமர்ப்பிக்க வேண்டிய தெரிவுக் குழுவின் இறுதியான தீர்வுத் திட்டம் தயாரிப்பதில் சிக்கல்கள் எழுந்துள்ளது.

தமிழர் தேசிய இனப்பிரச்சினையில் வடக்கு-கிழக்கு இணைப்பு முக்கிய விவகாரமாகவுள்ளது வடக்கு-கிழக்கு நிரந்தர இணைப்பு இன்றித் தமிழர் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு எதையும் எட்ட முடியாது எனபாராளுமன்றத் தெரிவுக் குழுவில் தெரிவிக்கப்பட்டுள்ள போதும், இதற்கு தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்கும் பல சிங்களக் கட்சிகள் எதிர்ப்பு காட்டி வருகின்றன.

இதேவேளை தமிழர் தேசிய இனப்பிரச்சினைக்கு விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியே தீர்வொன்றை எட்டமுடியும் என பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் உள்ள பலர் கருதுகின்றனர். இந் நிலையில் வடக்கு-கிழக்கு மாகாணங்களைப் பிரிக்கும் எந்தஒரு தீர்வுத் திட்டத்தையும் புலிகளுடன் பேச முடியாது எனவும் கருத்து நிலவுகின்றது.

இதன் காரணமாக பாராளுமன்ற தெரிவுக்குழு இறுதித் தீர்மானத்தை மேற்கொள்வதில் பெரும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## இன்று விடுதலைப் புலிகள் நல்லெண்ண குழு சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளுக்கும் யாழ். விஜயத்தை மேற்கொண்டுள்ள கிறிஸ்தவ நல்லெண்ண தூதுக் குழுவினருக்கும் இடையிலான சந்திப்பு இன்று பகல் 11.30 மணிக்கு விடுதலைப் புலிகள் அரசியல் தலைமையலுவலகத்தில் இடம் பெறும்.

இந்த சந்திப்பின் போது இன்றைய அரசியல் இராணுவ சூழ்நிலைகள் பற்றி தூதுக் குழுவினருக்கு புலிகள் விளக்கமளிப்பார்கள். அத்துடன் அரசியல் தீர்வு சம்பந்தமாக புலிகளின் நிலைப்பாடு பற்றியும் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் விளக்கிக் கூறுவார்கள் என தெரியவருகிறது.

## அமைதி ஏற்படுமானால் சமஷ்டியை ஏற்கலாம்

(கொழும்பு)

நாட்டில் அமைதியை ஏற்படுத்தவும்தேசிய ஒற்றுமையை உறுதிப்படுத்தவும் சமஷ்டி ஆட்சிமுறை உதவுமென்றால் அதனைச் சிறிலங்கா ஏற்றுக் கொள்ளலாம் என்று தமிழ்ப் பத்திரிகையாளர் கருத்தரங்கொன்றில் பேசிய தகவல் துறை ராஜாங்க அமைச்சர் ஏ. கே. ரணசிங்கா தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில், சமஷ்டி அமைப்பு என்ற எண்ணக்கருவை விஷமாக மாற்றியவர்கள் அரசியல்வாதிகள் தான். சமஷ்டி அமைப்பு கனடா,அவுஸ்திரேலியா,அமெரிக்கா ஆகிய நாடுகளில் நல்ல முறையில் ஒரு இணைப்புச் சக்தியாகச் செயற்படுகிறது என்றும்-

இன்று நாட்டிற்கு பெரடலிஸம்(சமஷ்டி அமைப்பு)] மற்றும் எந்த 'இஸ்சமும்' அவசியமில்லை இன்று நமக்குத் தேவைப்படுவது சமாதானம். சிறுபான்மையினர் தமது உரிமைகளைப்பெற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் அவர்கள் சந்திரனைக் கேட்கக் கூடாது என்றார்.

## கரையை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம்

(யாழ்ப்பாணம்)

மாதகல், திருவடிநிலை கடற்பரப்பில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா கடற்படையினர் நேற்று கரை நோக்கி கடும் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர்.

( 6ஆம் பக்கம் பார்க்க)

## ஏப்ரல் ஐந்தாம் திகதி புலமைப் பரிசில் பரீட்சை

ஐந்தாமாண்டு மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சை ஏப்ரல் மாதம் ஐந்தாம் திகதி குடாநாட்டில் நடத்தப்படுமென யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

## உணவுப் பொருள்களுக்கு புதிய விலை நிர்ணயம்

யாழ். செயலகம் அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கு புதிய கட்டுப்பாட்டு விலையை நிர்ணயித்துள்ளது.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களூடாகநிவாரண அட்டைகளுக்குவழங்கப்படும் உணவுப் பொருள்களின் விலைகளில் எதுவித மாற்றமும் இல்லை எனவும் அவற்றிற்கு மேலதிகமாக வழங்கப்படும் பொருள்களுக்கே இப்புதிய விலை நிர்ணயிக்கப்பட்டுள்ள

[6ஆம் பக்கம் பார்க்க]

## ராஜீவ் கொலை வழக்கு

## சாட்சியம் பதிவு செய்ய சிறிலங்காவிடம் கோரிக்கை

(கொழும்பு)

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக விசாரணை நடத்திவரும் சிறப்பு நீதி மன்றம் சிறிலங்கா அரசுக்கு கடிதம் எழுதியுள்ளது. இந்திய தூதுவரகம் மூலம் அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில் இந்திய நீதி மன்றத்தின் சார்

[6ஆம் பக்கம் பார்க்க]

## வவுனியா நகரில்

## சமூக விரோத குழுவினரால் 27 இளைஞர்கள் கைது

வவுனியாவில் பல இளைஞர்கள் சமூக விரோத குழுவினரால் கடத்தப்பட்டு வருகின்றனர். வவுனியா நகர்ப் பகுதியில் கடந்த ஒரு வாரத்தில் மட்டும் 27 இளைஞர்கள் சமூக விரோதிகளால் கடத்தப்பட்டுள்ளனர்.

தாண்டிக்குளம் சோதனை நிலையத்தில் வைத்துப் பல தமிழ் இளைஞர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு அருகிலுள்ளபகுதிகள்திடீரெனராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டு வருகின்றன. இதனால் அப்பகுதி மக்கள் பீதியடைந்து இடம் பெயர்ந்து வருகின்றனர். குறிப்பாக-மன்னார் வவுனியா வீதிகளிலுள்ள மக்கள் இவ்வாறு இடம்பெயர்ந்து வருகின்றனர்.

## கிழக்கில் சுற்றிவளைப்பு அதிகரிப்பு பெண்கள் உட்பட 10பேர் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவ சுற்றிவளைப்புகள் அதிகரித்துள்ளன இங்கு கடந்த வாரத்தில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ சுற்றிவளைப்பில் இரண்டு பெண்கள் உட்பட பத்து அப்பாவிப் பொதுமக்கள் கைது செய்யப்பட்டு சிறிலங்கா இராணுவ முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

கடந்த செவ்வாயன்று பாலையடி வெட்டை, வெல்

[6ஆம் பக்கம் பார்க்க]

## விடுதலைப் புலிகளை தடைசெய்தல்;

## தமிழக அரசின் கோரிக்கை பரிசீலனையில் உள்ளது

(சென்னை)

விடுதலைப் புலிகள் அமைப்பை தடைசெய்ய வேண்டும் என்ற தமிழக அரசின் வேண்டுகோள் மத்திய அரசின் தீவிர பரிசீலனையில் இருப்பதாக மத்திய உள்துறை இணை அமைச்சர் எம். எம். ஜேக்கப் தெரிவித்தார்.

சென்னையில் நேற்று செய்தியாளர்களி... பேசிய அவர்

-எம்.எம். ஜேக்கப்

மேலும் பல சக்திவாய்ந்த தகவல் தொடர்புசாதனங்கள் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் மறைத்து வைக்கப்பட்டிருக்கக் கூடும்என்று வெளிவந்த தகவல்களை அடுத்து தீவிரவாதிகளின் நடவடிக்கையை அரசு உன்னிப்பாக கவனித்து

[5ஆம் பக்கம் பார்க்க]

## வீரவணக்கம் வீரவேங்கை ஆண்டான்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலியில் கடந்த வியாழனன்று ஏற்பட்ட எதிர்பாராத விபத்தில் வீரவேங்கை ஆண்டாள் உயிரிழந்தார். இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

## மூதூர்

## இராணுவ சுற்றிவளைப்பில் தமிழ் மகன் ஒருவர் கைது

திருக்கோணமலை மாவட்டம் மூதூரில் கடந்த வியாழனன்று பல பகுதிகள் இராணுவ சுற்றி வளைப்பிற்கு உள்ளாகியுள்ளன. இந்த சுற்றிவளைப்பின்போது பலர் தாக்கப்பட்டுள்ளனர்.

இச்சுற்றிவளைப்பின் போது கட்டைபறிச்சானைச் சேர்ந்த கனகசபை நவரட்ணம் என்பவர் இராணுவத்தினரால் பிடித்துச் செல்லப்பட்டார்.

## வரி விளம்பரம்

**மணமக்கள்தேவையா**

எம்மிடம் வெளி நாட்டுப் பெண்களும் வெளிநாட்டை விரும்பும் பெண்களும் இருக்கிறார்கள் மாற்றுச்சம்மந்தத்தை விரும்பாத பெண்கள் கடிதமூலம் விண்ணப்பிக்கவும். மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். (2295)

## விளையாட்டுப் போட்டி

(அரியாலை)

அரியாலை கிழக்கு பூம்புகார் நித்திலாக் கல்விக்கூட முதலாவது இல்லவிளையாட்டுப் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

1 ஆம் இடத்தை திலீபன் இல்லமும்' 2ஆம் இடத்ததைச் சங்கரி இல்லமும், 3ஆம் இடத்தைச் சந்தோசம் இல்லமும் பெற்றுக்கொண்டன.

## விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வித்திணைக்கள முறைசாராக்கல்விப்பிரிவில் கடமையாற்றும் போதனாசிரியர் களுக்கான விசேட கூட்டம் எதிர்வரும் 17ஆம் திகதி காலை 9 மணிக்கு கல்வித் திணைக்களத்தில் நடைபெற உள்ளது.

அனைத்துப் போதனாசிரியர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.சுப்பிரமணியம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ச)

## வைத்தீஸ்வர முதலிடம்

இம் மாதம் 10ஆம் திகதி கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெற்ற யாழ் மாவட்டப் பாடசாலைகள் கலந்து கொண்ட உடற்பயிற்சிப் போட்டியில் 19வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் வைத்தீஸ்வரத் கல்லூரி மாணவர்கள் முதலிடம் பெற்றுள்ளனர் எரிந்துகொண்டிருக்கும்இரும்பு வளையத்திற்குள் நுட்பமாகப்பாய்ந்தமைஅனைவரின்கவனத்தையும் ஈர்த்தது. மாணவர்களின் சாதனையைப் பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் பழைய மாணவர் சங்கமும் பாராட்டியுள்ளன.

## ஸ்ரீதர் திரையரங்கில்

தினசரி மாலை 4.00 மணிக்கும்

சனி, ஞாயிறு தினங்களில்

மாலை 4.00, 6.00 மணிக்கும்

காண்பிக்கப்படுகின்றது


# FIVE FOR HELL

(நரகத்திற்கு ஐவர்)

(தமிழ் விளக்கம் செய்யப்பட்டது)

[சி/4011]

## 180-ம் நாள் நினைவலைகள்



தென்மராட்சி மண்ணில் 26-11-1968

மணலாற்று மண்ணில் 18-09-1991

**கப்டன் சீலன்**

(தாமோதரம்பிள்ளை, இளம்பிறைநாதன்)


மணலாறு துலங்க
மாண்புடனே களங்கண்டு
நிணஞ்சொரிய-எதிரீதலை
நிலஞ்சாயப் போராடி-
கணப்பொழுதில் மாய்ந்தவனே
காவியங்கள் சமைத்தவனே
வணக்கமுடன் எங்கள்
அஞ்சலிகள் உன்னடிக்கே ......

'காலம் வெல்லும் - உன்
கனவுகள் பலிக்கும் - தமிழ்
ஈழம் வெல்லும் உன்பேர் வெல்லும்

- நாதன்ஸ் கூல் பார்
சங்கத்தானை-சாவகச்சேரி

(2294)

## காணவில்லை



[2296]

**பரமு - யோகராசா**

அரியாலை கனகரத்தினம் வீதியைச் சேர்ந்த பரமு - யோகராசா - வயது 32 வருடங்கள் - பொதுவான நிறம். கடந்த செவ்வாய்க் கிழமையிலிருந்து காணாமல் போய்விட்டார். நீல நிறக் கோடிட்ட சாரத்துடனும் சேட்டுடனும் கடைசியாகக் காணப்பட்ட இவரைக் கண்டவர்கள் இல: 127 கனகரத்தினம் வீதியில் உள்ள அவரது பெற்றோருடன் தொடர்பு கொள்ளவும்.

ப. நவரத்தினம்
125, கனகரத்தினம் வீதி, அரியாலை

## நினைவு கூருகின்றோம்
## 1992-03-15

1984 ஆண்டு இதே தினத்தில் முல்லைத்தீவில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட யாழ். 2 ஆம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த தமிழ் இளைஞன்.

1988 ஆம் ஆண்டு திருக்கோணமலை குச்சவெளிப் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது ஏற்பட்ட மோதலில் வீரச்சாவெய்திய -

**நவம்** (இரத்தினம் குகராசா – திரியாய், திருக்கோணமலை.)

**மூர்த்தி** (செல்லையா ஜீவராசா - திரியாய், திருக்கோணமலை.)

திருக்கோணமலை, தம்பலகாமம் பகுதியில் இந்தியப் படையினரால் பேரூந்திலிருந்து இறக்கப்பட்டு அடித்துக் கொல்லப்பட்ட 3 தமிழர்கள்.

கிளிநொச்சியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட ஸ்கந்தபுரம் இல, 307 ஐச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.)

1989 ஆம் ஆண்டு மணலாறு அளம்பில் பகுதியில் இந்தியப் படையினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய -

**2- ம் லெப்.விக்ரம்** (கிருஷ்ணபிள்ளை சவுந்தரபிள்ளை - கள்ளப்பாடு, முல்லைத்தீவு.)

**ரமேஸ்** (ஆறுமுகம் பாலநாதன் - குமுழமுனை, முல்லைத்தீவு.)

திருக்கோணமலை, சேனையூர்ப்பகுதியில், தேசவிரோத சக்திகளுடனான மோதலின் போது வீரச்சாவெய்திய -

**2-ம் லெப். காமன்** (நாகலிங்கம் கதிர்காமத்தம்பி - கிளிவெட்டி, மூதூர், திருக்கோணமலை.)

**ஜெயா** (கணபதிப்பிள்ளை திருச்செல்வம் - கட்டைபறிச்சான், திருக்கோணமலை.)

மட்டக்களப்பு, கோட்டைக்கல்லாறுப் பகுதியில் இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டு,பின்னர் களுவாஞ்சிக்குடி காவல் நிலையத்தில் சடலமாக ஒப்படைக்கப்பட்ட கோட்டைக்கல்லாறைச் சேர்ந்த- பேராதனைப் பல்கலைக்கழக வைத்தியபீட 2 ஆம் ஆண்டு மாணவன்.

மன்னாரில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட வடக்கந்தை வாசியான தமிழ்ப் பொதுமகன்.

1991 ஆம் ஆண்டு ஆனையிறவில் சிறிலங்காப்படையினருடனான மோதலின்போது காயமுற்று, யாழ். மருத்துவ மனையில் வீரச்சாவெய்திய -

**அனஸ்** (ஆறுமுகம் ஜெகானந்தராசா - புளியம் பொக்கணை, பரந்தன்.)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி**

(சி/4053)


## குளு குளு சூழலில்

குதூகலமாக களித்திட

# குளிரோடையை

நாடுங்கள்.

குளிர்பானங்கள் மற்றும் ஐஸ்கிறீம், சர்பத் வகைகளுக்கு நாடவேண்டிய இடம்

# குளிரோடை

மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்.

(பஸ்நிலையம் முன்பாக)

உங்கள் இல்லங்களில் மங்களகரமான வைபவங்களுக்காக ஐஸ்கிறீம், கேக் வகைகள் தயாரித்துத் தரப்படும்.

(சி/4055)

## [‘கியூபெக்’ பிரச்சினை]

# பாராளுமன்ற தெரிவுக்குழுவின் முடிவு பிரச்சினையை தீர்ப்பது சந்தேகம்

நீண்டகாலமாக கனடாவின் ஒருமைப்பாட்டுக்கு சவாலாக இருந்துவரும் ‘கியூபெக்’ பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் எந்த அளவுக்கு வெற்றியளிக்கும் என்ற கேள்வி இப்போது எழுந்துள்ளது பலத்த வாதப் பிரதிவாதங்களின் பின் அண்மையில் இந்த யோசனைகள் வெளியிடப்பட்டன.

கனடாவின் பிரதான மூன்று அரசியல் கட்சிகளும் இந்த யோசனைகளை தாம் ஏற்றுக்கொள்வதாக அறிவித்துள்ளபோதிலும் இதில் உள்ள சில குறைபாடுகள் இத்திட்டம் எந்தளவுக்கு வெற்றியளிக்கும் என்பதில் பல கேள்விக்குறிகளை எழுப்பியுள்ளதாக சர்வதேச செய்தியாளர்கள் கூறியுள்ளனர்:

### விசேட பாராளுமன்றக் குழு:

கனடாவின் பிரெஞ்சு மொழிபேசும் மாகாணமான கியூபெக்கில் எழுந்துள்ள பிரிவினவாதப் போக்கைக் கட்டுப்படுத்துவதற்கான யோசனைகளைத் தெரியப்படுத்துவதற்காக விசேட பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை கனேடிய அரசாங்கம் அமைத்திருந்தது:

கனடாவின் பிரதான கட்சிகளான கன்ஸர் வேட்டிவ், லிபரல், நியூ டி மோக்கிரட்டில் ஆகியவற்றின் பிரதிநிதிகள் இடம்பெறும் இக்குழு அண்மையில் இடம்பெற்ற காரசாரமான கருத்துப்பரிமாற்றங்களின் பின்னர் யோசனைகளை ஏற்றுக் கொண்டது. இந்த யோசனைகள் கடுமையான வாதப்பிரதிவாதங்களுக்குள்ளாகியிருந்ததால் குறிப்பிட்ட காலத்தில் இவ் அறிக்கையை வெளியிட முடியாத நிலை ஏற்பட்டது.

### கியூபெக் கோரிக்கையும் புதியயோசனைகளும்:

கியூபெக் மக்கள் தனியானதொரு இனம் என்பதும் அவர்களுக்கு தனியானதொரு கலாசாரமும் சட்ட உரிமைகளும் உள்ளன என்பதும் இந்த யோசனைகளில் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது. இது அரசியல் அமைப்பு ரீதியாக அங்கீகரிக்கப்படவேண்டுமென இக்குழு சிபார்சு செய்திருப்பது கியூபெக் மக்களின் கோரிக்கைக்குக் கிடைத்த முதலாவது வெற்றி என்றே கருதப்படவேண்டும்.

இவற்றைவிட கலாசாரமும் தொடர்பான பூரண சுதந்திரம், பிராந்திய அபிவிருத்தி, குடியேற்றம், உல்லாசப் பயணத்துறை, வீடமைப்பு மீன்பிடி, வேலைவாய்ப்பு போன்ற விடயங்களில் அதிகாரத்தை கியூபெக் மாநிலத்திற்கு மாற்றுவதும் புதிய யோசனைகளில் அடங்கியுள்ளன.

கியூபெக்மக்களின் கோரிக்கைகளில் ஒன்றான அரசியல் அமைப்பு மாற்றங்களை ‘வீட்டோ’ செய்யும் உரிமையும் அதன் மூலம் வழங்கப்பட உள்ளது.

### மேற்கு கனேடிய மாகாணங்கள் எதிர்ப்பு

கியூபெக் மாகாணத்திற்கு தனியான அதிகாரங்கள் வழங்கப்படுவதை கனடாவின் மேற்கு மாகாணங்கள் ஏற்றுக்கொள்வதற்கு மறுக்கின்றன. சகல மாகாணங்களும் சரிசமமாகவே கணிக்கப்படல் வேண்டுமென அவை வலிவுறுத்தி வருகின்றன இப்போக்கு வேறு மாகாணங்களுக்கும் பரவலாம் என அவை அஞ்சுகின்றன.

ஆனால் இப்பிரச்சினைகள் விரைவாக தீர்த்து வைக்கப்பட்டு விடவேண்டும் மென்றே பெரும்பாலான கனேடியர்கள் விரும்புகின்றனர். இதன்மூலம் சிக்கலான ஒரு நிலையில் இருந்து நாடு வெளிவர முடியுமென அவர்கள் நம்புகின்றனர்.

கியூபெக் பிரச்சினை தொடர்பான அரசியல் அமைப்பு மாற்றங்களை மேற்கொள்ளப்பட பாராளுமன்ற விசேட குழுவின் தலைவராக கடமையாற்றியவர் முன்னாள் பிரதமரும் அரசியல் அமைப்பு அமைச்சருமான ஜோக்ளாக் சீர்திருத்தங்களை மேற்கொண்டு பிரச்சினைகளிற்கு தீர்வு காண்பதில் உள்ள எந்தவித காலதாமதமும் மிகமோசமான நிலைக்கே இட்டுச் செல்லுமென அவர் அஞ்சுகிறார்.

### ஆளும் கட்சியின் இக்கட்டான நிலை:-

பிரதமர் மல்லோனிக்கான ஆதரவு அண்மையில் 11 வீதத்தால் குறைவடைந்துள்ளது. கருத்துக் கணிப்பு வாக்குகள் மூலம் இது தெரியவந்துள்ளது.

1984 ஆம் ஆண்டில் அவர் பதவியேற்ற பின்னர் அவரது ஆட்சியின் ஸ்திரத்தன்மையில் இவ்வளவு பாதிப்பு ஏற்படவில்லை. இதனால் தற்போதைய ஆட்சிக் காலம் அடுத்த வருடம் முடிவடைகின்ற போதிலும் உடனடியாக தேர்தலை நடாத்துமாறு எதிரணியினர் கோரியுள்ளனர்.

இந்த நிலையில் ஏற்கனவே ஆட்டம் கண்டுள்ள கனேடிய டொலரின் பெறுமானம் கியூபெக்கின் ஸ்திரமற்ற தன்மை காரணமாக மேலும் பாதிப்படையக் கூடிய நிலையில் உள்ளதாக பல பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர். அதே வேளை இப்பிரச்சினையை தீர்த்து வைக்கக் கூடிய நிலையில் இருப்பதால் மட்டுமே தனதுநம்பகத்தன்மையை அரசு காப்பாற்றக் கூடியதாக இருக்கும்.

### சிக்கலாக இருக்கும் இரு விடயங்கள்

எனினும் விசேட பாராளுமன்றக் குழுவின் யோசனைகளில் உள்ள இருவிடயங்கள் கியூபெக் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படுமா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது செனட் சபைக்கான அதிகாரங்கள் வரையறுக்கப்படாது இருப்பதும், அதிகாரங்களைப் பகிர்வதில் உள்ள குறைபாடான நிலையுமே இந்த அறிக்கை மீதான நம்பகத்தன்மையைப் பாதிப்பதுடன் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதிலுள்ள சாதகமான நிலைமையையும் பலவீனப்படுத்துகிறது.

பிரெஞ்சு மொழி பேசும் கியூபெக் மாகாணம் பிரிந்து போகாமல் தடுப்பதில் அரசின் நடைமுறைகள் எந்த அளவுக்கு வெற்றியைத்தரும் என்பதை உடனடியாகச் சொல்ல முடியாமல் உள்ளது. அதேவேளையில் இது தொடர்பான கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு ஒன்று எதிர் வரும் ஒக்டோபரில் நடைபெற உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

நன்றி: வீரகேசரி

---

# பாரசீக வளைகுடாவை நோக்கி அமெரிக்க யுத்தக் கப்பல்கள் விரைவு

## ஈராக்கிற்கு அமெரிக்கா எச்சரிக்கை

(வாஷிங்டன்)

ஈராக்கிற்கு எச்சரிக்கை விடுக்கும் வகையில் அமெரிக்காவின் விமானந்தாங்கிக் கப்பல் ஒன்றும், அதற்கு பாதுகாப்பாகபோர் கப்பல்களும் பாரசீக வளைகுடாவிற்கு அனுப்பப்பட்டிருப்பதாக அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சகம் அறிவித்துள்ளது.

பேரழிவை ஏற்படுத்தக் கூடிய ஆயுதங்களை ஈராக் அழிக்க வேண்டுமெனக் கோரும் ஐ. நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானத்திற்கு ஈராக் அதிபர்சதாம்ஹுசைன் கட்டாயம் அடிபணிந்தேயாக வேண்டும் எனபதற்கு தெட்டத்தெளிவாக விடுக்கப்பட்ட எச்சரிக்கையாகவே இக் கப்பல்கள் அனுப்பப்பட்டதாக வெள்ளை மாளிகை வட்டாரங்கள் கூறியுள்ளன.

ஐ நா. பாதுகாப்பு சபையின் தீர்மானங்களை நிறைவேற்ற ஈராக் தவறிவிட்டது என்று ஐ நா. பாதுகாப்பு சபை தீர்மானம்நிறைவேற்றிய மறு நாளே அமெரிக்கா இவ்விதம் செயல்படத் தொடங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

---

தப்பான காசோலை எழுதிய

# காங்கிரஸ்உறுப்பினர்விபரம் வெளியிடப்படவுள்ளது

(வாஷிங்டன்)

அமெரிக்க காங்கிரஸ் வங்கியில் தப்பான காசோலைகளை எழுதிய காங்கிரஸ் உறுப்பினர்கள் 300 பேரின் பெயர்களை அமெரிக்க காங்கிரஸ் வெளியிடவிருக்கின்றது.

10 மில்லியன் அமெரிக்க டாலர்களுக்கு மேலான தொகையை இந்த உறுப்பினர்கள் பெற்றுக்கொண்டார்கள் என்று ஒரு விசாரணையிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் வட்டியில்லாமல் பணத்தைப் பெற்றார்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வங்கி கடந்த வருடம் மூடப்பட்டது.

---

இந்தியாவின்

# இராணுவத் தளபதியை நீக்க எதிர்க்கட்சிகள் கோரிக்கை

பக்கத்து நாடுகளின் உறவைக் கெடுக்கும் வகையில் கருத்து வெளியிட்டுள்ள றொட்றிக்கஸ் பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும் என்று எதிர்க் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்திய அரசை வற்புறுத்தியுள்ளார்கள்.

டெய்லி பொயினியர் என்ற பத்திரிகைக்கு அவர் அளித்த பேட்டியில், பாகிஸ்தான் செய்வது வெறும் சில்லறை எரிச்சலே தவிர, அக்கறை ஏற்படுத்தக் கூடிய பயமுறுத்தல் அல்ல என்று சொல்லியிருக்கிறார்.

பாகிஸ்தானும் இந்தியாவும் அணுவாயுத மற்ற தெற்காசிய பிராந்தியத்தை உருவாக்க ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ளுமாறு மற்ற நாடுகளுக்கு என்ன உரிமையிருக்கிறது என்றும் தளபதி றொட்றிக்கஸ் கேட்டிருந்தார்.

நாட்டில் அஸாம், பஞ்சாப், காஸ்மீரில் கிளர்ச்சிகளை அடக்க இராணுவம் ஏவப்பட்டதை குறித்தும் ஜெனரல் றொட்றிக்கஸ், நாட்டின் இன்றைய முக்கியமான அக்கறை உள்ளே இருக்கும் நெருக்கடிதான் என்று கூறியிருக்கிறார்.

அவர் தெரிவித்த கருத்துக்கள் அரசியல் சார்ந்த கருத்துக்கள் என்று எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டியுள்ளன.

---

இந்திய வெளியுறவுச் செயலர்

# டிக்சிற்றின் பத்திரிகைப் பேட்டிக்கு லோக்சபையில் கவலை தெரிவிப்பு

அணுவாயுதப் பரவல் தடுப்புப் பிரச்சினை குறித்து இந்தியா, வாஷிங்டனுடன் இருதரப்புப் பேச்சுவார்த்தைகள் நடத்தும்போது வெளியுறவுச் செயலர் ஜே. என். டிக்சிற் அமெரிக்க பத்திரிகையாளர்களிடம் வெளியிட்ட கருத்துக் குறித்து நேற்று லோக் சபையில் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கவலை தெரிவித்தனர்.

இந்து சமுத்திரப் பகுதியில் அமெரிக்காவும், இந்தியாவும் கூட்டாகக் கடற்பயிற்சி நடத்துவது பற்றிய திட்டம் பற்றியும், சுப்பர் 201 பிரிவின் கீழ் இந்தியா மீது நடவடிக்கை எடுக்கப் போவதான அமெரிக்காவின் கருத்துக் குறித்தும் இரு தரப்பு உறுப்பினர்களும் கவலை வெளியிட்டனர்.

அமெரிக்காவில் நடந்த விவாதங்கள் பற்றிய தகவல்களை ஜே. என். டிக்சிற்றிடம் கேட்டுத் தெரிந்து கொண்ட பின் திங்கட்கிழமை லோக் சபையில் அரசு அறிக்கை ஒன்றை வெளியிடும் என்று வெளியுறவு அமைச்சர் மாதவசிங் சோலங்கி பதிலளித்தார்.

இந்தியாவின் இறையாண்மையே ஆட்டம் கண்டு விட்டதாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அரசைக் குற்றம் சாட்டினர்.

அமெரிக்கா சென்றிருக்கும் ஜே. என். டிக்சிற் இன்று டில்லி திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

### விஷச் சாராயத்துக்கு பத்து பேர் பலி

(சென்னை)

தமிழகத்தில் மயிலாடுதுறையில் விஷச் சாராயம் அருந்தி கடந்த வியாழன் பத்துப்பேர் மரணமடைந்துள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

முப்பத்திரண்டுபேர் விஷச் சாராயம் அருந்தினர் என்றும் இதில் பத்துப் பேர் மரணமடைந்தனர் என்றும், இருபத்திரண்டு பேர் உடனடி சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நேரம் விஷச் சாராய சம்பவத்திற்கு காரணமானவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழக முதலமைச்சர் செல்வி. ஜெயலலிதா உறுதியளித்துள்ளார். வெள்ளி சட்டப் பேரவையில் இந்திரா காங்கிரசால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதில் அளிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார். இந்த நடவடிக்கை குறித்து ஒரு பெண் உட்பட ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் மேல் விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### தனிக்குழுவாக ஏற்பு

(டில்லி)

தெலுங்கு தேசம் கட்சியிலிருந்து பிரிந்து சென்ற ஐந்து இந்திய லோக்சபா எம். பிகளையும் தனிக்குழுவாக இயங்க அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த அங்கீகாரத்தை இந்திய லோக்சபா சபாநாயகர் சிவராஜ் பாட்டேல் வழங்கியுள்ளார்.

பதினொரு எம். பிகளைக் கொண்ட தெலுங்கு தேசம் கட்சியிலிருந்து விஜயகுமார் ராஜு தலைமையில் ஐந்து பேர் பிரிந்து சென்றுள்ளதால் இந்த குழுவிற்கு லோக்சபாவில் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

### யாழ். கல்லூரி - சென் ஜோன்ஸ்

# கிரிக்கெட் போட்டி 'டிரா'வில் முடிவடைந்தது

(யாழ். விளையாட்டு நிருபர்)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும், சென் ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற வருடாந்த கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது. இப்போட்டி புதன்கிழமை 11 ஆம் திகதியும் வியாழக்கிழமை 12 ஆம் திகதியும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி 307 ஓட்டங்களை 9 விக்கெட் நஷ்டத்திற்கு பெற்றுள்ளது.

சென் ஜோன்ஸ் கல்லூரி தனது முதலாவது இன்னிங்சில் மொத்தம் 411 ஓட்டங்களை 8 விக்கெட் நஷ்டத்திற்கு பெற்றது.

சென் ஜோன்ஸ் கல்லூரி இவ்வருடம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வருடாந்தக் கிரிக்கெட் போட்டிகளில் ஆகக் கூடுதலாக 411 ஓட்டங்களை பெற்றமை ஒரு சாதனையாகும்.

யாழ்ப்பாணக் கல்லூரி தனது இரண்டாவது இன்னிங்சில் 7 விக்கெட் நஷ்டத்திற்கு மொத்தம் 79 ஓட்டங்களைப் பெற்றது. (42)

### மனித உரிமை மீறலுக்கு எதிரான

# பாத யாத்திரை நாளை கொழும்பில் ஆரம்பம்

(கொழும்பு)

எதிர்க்கட்சியினரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள பாத யாத்திரை நாளைதிங்கட்கிழமையன்று விகாரமாதேவி பூங்காவிலிருந்து ஆரம்பமாகவுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் நவசமசமாசக்கட்சி, மக்கள்ஐக்கிய முன்னணி, உட்பட பல்வேறு எதிர்க்கட்சிகளும், பிக்குமார் சங்கமும் இணைந்து இப்பாத யாத்திரையை நடத்தவுள்ளன.

இப்பாத யாத்திரையின் பிரதம அமைப்பாளரான சிறிலங்கா சுதந்திரக் கட்சி எம். பி மகிந்த ராஜபக்ஷா கருத்துக் கூறுகையில் பதற்றத்திற்கு உள்ளாக்கப்பட்ட வகையில் கடத்தப்பட்ட, காணமல்போன மற்றும்மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டோரின் குடும்பங்களும் அன்னையரும், மனைவியரும், மற்றும் உறவினர்களுமாக பல்லாயிரக்கணக்கானவர் இதில் பங்கு பற்றுவர் எனக்குறிப்பிட்டார்.

இப்பாத யாத்திரையானது களுத்துறை, பாணந்துறை, அழுத்கம, காலி, வெலிகம மாத்தறை, தெவிநுவர, வழியாகக் கதிர்காமத்தை ஏப்ரல் 2 ஆம் திகதியன்று சென்றடையும் எனத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆங்காங்கேயுள்ள நகரங்களில பொதுக்கூட்டங்களும் நடத்தப்படவுள்ளது.

பாதயாத்திரை மதநம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டது என்றும் அகிம்சை முறையிலானது எனவும் கூறும் திரு. மகிந்த ராஜபக்ஷா பங்கு கொள்வோர் மது அருந்தாமலும் தூய வெள்ளை ஆடை அணிந்தோராயும் இருக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டுள்ளார்.

# கி. சே. உத்தியோகத்தர் விண்ணப்ப திகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

கிராமசேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் 11 ற்கு ஆட்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்ப முடிவுத்திகதி மேலும் நீடிக்கப்பட்டுள்ளதாக யாழ் அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

யாழ் மாவட்டத்திலுள்ள விண்ணப்பதாரிகள் குறுகிய கால அவகாசத்தில் இதற்கு விண்ணப்பிக்க முடியாதுள்ளமையை சுட்டிக் காட்டியதை அடுத்தே இம்முடிவுத் திகதி எதிர்வரும் 24 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது. முன்னர் இதன் முடிவுத் திகதி நேற்று வரை என அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே. (ச)

## தமிழ்த்தினப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ் கோட்ட ரீதியான தமிழ்மொழித் தினப்போட்டி எதிர்வரும்20ஆம்21ஆம் திகதிகளில் யாழ் இந்துமகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கடந்தவருடம் கொத்தணி, தேசிய, தனியார் பாடசாலை மட்டத்தில் நடைபெற்ற போட்டியில் முதலாமிடத்தைப் பெற்ற நிகழ்ச்சிகள் மட்டுமே இதில் கலந்து கொள்கின்றன. இந்நிகழ்ச்சிகளுக்கான பக்கவாத்தியம் வாசிப்போர் ஆசிரியராக அல்லது மாணவராக இருத்தல் வேண்டும் என வலியுறுத்தப் பட்டுள்ளது. [ச]

31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பிதழும்
15 . 3 . 92

ஆறுமுகம் தம்பிஐயா



கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்
சகோதரர்,
(2292)

# மாணவர் முத்திரைக்கு உள்ளூர் விளை பொருள்

(புங்குடுதீவு)

1991டிசம்பர் 1992ஜனவரி மாதங்களுக்குரிய மாணவர் உணவு முத்திரைகள் சகல பாடசாலைகளுக்கும் விநியோகம் செய்யப் பட்டுள்ளதாகவும் அவற்றிற்கு உள்ளூர் உற்பத்திப் பொருள்களான பயறு, உழுந்து, கௌபி, நாட்டரிசி போன்றவற்றை கொள்வனவு செய்து விநியோகிக்கும் படியும் பிரதேச பிரதி சமூகசேவைப் பணிப்பாளர் அவர்கள் சகல பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களிற்கும் அறிவித்தல் விடுத்துள்ளார். மேற்படி பொருள்களின் உச்சவிற்பனை விலையும் இதில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் படி பயறு-27 ரூபாவாகவும் உழுந்து 25ரூபாவாகவும், கௌபி22ரூபாவாகவும், நாட்டரிசி 26ரூபாவாகவும் விநியோகம் செய்யும் படியும் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. [22]

# தோட்டங்கள் தனியார் மயம் அரசு கைவிட வேண்டும்

பெருந்தோட்டத்துறையின் நிர்வாகத்தை தனியார் மயமாக்கும் திட்டத்தை அரசு கைவிட வேண்டும் என நவசமசமாஜக்கட்சியின் பொதுச் செயலாளர் விக்கிரமபாகு கருணாரத்தின தனியார் மயமாக்கலுக்கு எதிராக பெருந்தோட்டத்துறை சங்கங்களின் சார்பில் கோரியிருக்கிறார்.

இச்சங்கங்கள் சார்பில் விடுத்திருக்கும் கோரிக்கையில் பெருந்தோட்டத்துறைக்கு கூடுதல் சுயாதீனத்தை வழங்க வேண்டுமெனவும், அதன் நிர்வாகத்தை பன்முகப்படுத்த வேண்டும், நிர்வாகத்தில் தொழிலாளர்களின் பங்களிப்பை கூடுதலாக அதிகரிக்க வேண்டும்.

இவற்றை நடைமுறைப் படுத்தாதுவிடில் தனியார் மயமாக்கலுக்கு எதிராக நாம் வெகுஜன இயக்கம் ஒன்றை தொடர்ந்து கட்டி எழுப்புவோம் என அவர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்-இலங்கை

மகாபொல கொடுப்பனவு

3ஆம், 4ஆம் தவணைப்பணம்

மேற்படி கொடுப்பனவு பின்வரும் மாணவர்களுக்கு கீழ்வரும் அட்டவணைப்படி செயற்படும்.

இரண்டாம் வருடம்

| | | |
|---|---|---|
| மருத்துவ பீடம் | 16-03-92 | 9.00-12.00 மு.ப |
| கலைப் பிரிவு | 19-03-92 | 9.00-12 00 மு.ப |
| வர்த்தகப் பிரிவு | 23-03-92 | 9.00-12.00 மு.ப |
| வியாபார நிர்வாகப் பிரிவு | | |

மூன்றாம் வருடம்

| | | |
|---|---|---|
| மருத்துவ பீடம் | 16-03-92 | 1.30 - 3.00 பி.ப |
| கலைப்பிரிவு | 19-03-92 | 1.30 - 3.00 பி.ப |
| வர்த்தகப் பிரிவு | 23-03-92 | 1.30 - 3.00 பி.ப |
| வியாபார நிர்வாகப் பிரிவு | | |

நான்காம் வருடம்

| | | |
|---|---|---|
| மருத்துவ பீடம் | 17-03-92 | 9.00-12.00 மு.ப |
| (4ஆம், 5ஆம் வருடம்) | | |
| கலைப் பிரிவு | 20-03-92 | 9 00-12.00 மு.ப |
| வர்த்தகப் பிரிவு | 24-03-92 | 9.00-12.00 மு.ப |
| வியாபார நிர்வாகப் பிரிவு | | |

2ஆம், 3ஆம் 4ஆம் வருடம்

| | | |
|---|---|---|
| பௌதீகவிஞ்ஞானப்பிரிவு | 17-03-92 | 1 30-3.00 பி,ப |
| உயிரியல்விஞ்ஞானப்பிரிவு | 20-03-92 | 1 30-3.00 பி.ப |
| | 24-03-92 | 1.30 - 3 00 பி.ப |

கொடுப்பனவின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டியவை
1. பல்கலைக்கழக மாணவர் அடையாள அட்டை
2. ரூபா 2/- பெறுமதியான முத்திரை

பதிவாளர்

(சி/4051)

# சிறிலங்கா பொருளாதாரம் மிக நெருக்கடியிலுள்ளது
- பி. பி. சி. கணிப்பு

(கொழும்பு)

சிறிலங்காவில் பல்வேறு காரணிகளாலும் பொருளாதார நிலை மிகுந்த நெருக்கடிக்குள்ளாகி வருவதாக பி.பி.சி. தனது செய்திசேவையில் குறிப்பிட்டுள்ளது.

கடந்த சில மாத காலமாக மழை இல்லாமல் ஏற்பட்ட வரட்சியினால் பயிர்ச்செய்கையில் பாதிப்பேற்படுத்தியுள்ளது. தேயிலை உற்பத்தியும் வீழ்ச்சி அடைந்துள்ளது.

உலக சந்தையில் ஈராக் சோவியத்யூனியன் இலங்கைத் தேயிலைக் கொள்வனவைக் குறைத்துள்ளதால் ஏற்றுமதி பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் ஏற்றுமதி வருமானத்தையும் இழந்துள்ளது.

வரட்சி காரணமாக நீர் மின்சார உற்பத்தியிலும் வீழ்ச்சியேற்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கில் தமிழ் போராளிகளுக்கு எதிராக முடக்கி விடப்பட்ட போரினால் இராணுவச் செலவினங்கள் அதிகரித்துச் செல்வதுடன் போரினால் பாதிப்புறும் அகதிகள் செலவினமும் அதிகரித்துள்ளது.

இதனால் சிறிலங்காவின் வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை மேலும் அதிகரிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை துணி ஆடை ஏற்றுமதி வருமானம் அதிகரிக்கும் என சிறிலங்கா அரசு நம்பிக்கை தெரிவித்துள்ளதாகவும் அறிவித்தது.

## வேண்டுகோள்

1992ஆம் ஆண்டுக்கான வாழ்க்கைத்திறன் கல்விக்கான மூலப்பொருள்களை கொள்வனவு செய்வதற்கான விண்ணப்பப்படிவங்களை இதுவரை அனுப்பிவைக்காத பாடசாலைகளை உடனடியாக அனுப்பிவைக்குமாறு உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.சுப்பிரமணியம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ச)

### தொழில்நுட்பக்கல்லூரி

# திட்டமிட்டபடி பரீட்சை நாளை ஆரம்பமாகும்

யாழ். பல் தொழில் நுட்பக் கல்லூரி இறுதி ஆண்டுப் பரீட்சைகள் திட்டமிட்டபடி நாளை ஆரம்பமாகின்றன

இப்பரீட்சைகளுக்கான வினாத்தாள்கள் நேற்றுக் காலையாழ். வந்து சேர்ந்தன.

கொழும்பிலிருந்து இவ் வினாத்தாள்கள் செஞ்சிலுவைச் சங்கத்தினால் எடுத்து வரப்பட்டு கிளிநொச்சியில் வைத்து யாழ். கல்வித் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டதாக தெரிய வருகிறது.

கடந்த 1989, 1990, 1991 ஆம் ஆண்டுகளில் பரீட்சை நடைபெறாததால் அம் மாணவர்களுக்கான விசேட பரீட்சையாக இப்பரீட்சை நடாத்தப்படவுள்ளது.

இப்பரீட்சைகளை நடத்தக் கோரி தொழில் நுட்பக் கல்லூரி மாணவர் அவை அண்மையில் துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டிருந்தது தெரிந்ததே.

## தேர்த்திருவிழா

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை கிழக்கு ஆத்திப்புலம் அருள்மிகு ஸ்ரீ சந்திரசேகர விநாயகர் ஆலய வருடாந்த உற்சவத் தேர்த்திருவிழா 16ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.00 மணிக்கும், தீர்த்த உற்சவம் 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7 00 மணிக்கும் பங்குனிமகம் நாளன்று நடைபெறும். (24)

## சிந்தனைக்கு

ஒரு நாடு சிந்திக்கத் தொடங்கிய நிமிடத்திலிருந்து அதை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது.

— வால்ட் டேயர்


# ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 15-03-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308
த பெ. எண் 05


# தெற்கே வருவதால் பயனேதும் இல்லை

தெற்கில் இருந்து வடக்கே நல்லெண்ணத் தூதுக் குழுக்கள் வந்து போகின்றன. அதேபோல் வடக்கில் இருந்தும் நல்லெண்ணத் தூதுக் குழுக்கள் தெற்கே செல்லவேண்டும். தமிழ் மக்களின் நியாயமான உரிமைகள் வழங்கப்பட வேண்டியதின் அவசியத்தை தென்னிலங்கை மக்களுக்கு நேரில் எடுத்துக் கூறி கருத்துப் பரிமாறிக் கொள்ளலாம். இவ்வாறு யாழ்ப்பாணம் வந்துள்ள கிறிஸ்தவ தூதுக்குழுவினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிறிஸ்தவ தூதுக் குழுவினரின் இக்கோரிக்கை வெளிப்படையாக நோக்கும் போது ஆரோக்கியமான அரசியல் சூழலுக்கு வழிவகுக்கும் என கருதப் படக்கூடியதாக இருக்கும் எனினும் உண்மையில் அதன் பலாபலன்கள் எந்தளவு இருக்கும். அதனால் நன்மை விளையுமா என்பதும் கேள்விக்குரியதே.

தமிழரின் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாகவும், தமிழரின் ஏனைய நெருக்கடிகள் தொடர்பாகவும் சிங்கள மக்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும் கடந்த நாற்பது வருடங்களுக்கு மேலாகத் தமிழ் மக்களும் அரசியல் வாதிகளும் தெரிவித்தவண்ணமே உள்ளனர். இது பாராளுமன்றத்திலும், சர்வகட்சி மாநாடு, வட்டமேசை மாநாடு, கருத்தரங்குகள், பொதுக்கூட்டங்கள் என்பனவற்றின் மூலம் வெளிப்படையாகவும், அரசியல் தலைவர்கள் ஆட்சியாளர்கள் ஆகியோரிடத்தில் நேரடியாகவும் தெரிவித்து வந்துள்ளனர். ஆனால், தமிழரின் நியாயமான உரிமைகளைப் புரிந்துகொள்ளவோ அன்றி அதற்குப் பரிகாரம் தேடவோ அரசியல்வாதிகள் முனையவில்லை. இந்நிலையிலேயே தேசிய இனப் போராட்டம் ஆயுதப்போராட்டமாக வளர்ச்சி அடைந்தது.

அன்று தமிழ் தலைவர்கள் தேசிய இனப்பிரச்சினை சம்பந்தமாக தென்னிலங்கையில் முன்வைத்த கருத்துக்களை மக்கள் மத்தியில் சென்றடைய முடியாமல் தடுத்தவர்கள் சிங்கள பேரினவாத அரசியல்வாதிகளும், பேரினவாதப் பத்திரிகைகளுமே ஆகும். ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவது ஒன்றே நோக்கமாகச் செயற்பட்ட அரசியல்வாதிகள் தேசிய இனப்பிரச்சினையை சிங்கள மக்கள் விளங்கிக் கொள்ள கூட விடவில்லை. இன்றும் அதே நிலைதான் தொடர்கின்றது. பௌத்த சிங்களப் பேரினவாதிகளும், பத்திரிகைகளும் தமிழரின் தேசிய இனப் போராட்டத்தை இராணுவ நடவடிக்கைகள் மூலம் அடக்க வேண்டும் என வற்புறுத்துகின்றனவே ஒழிய தமிழர் தேசிய இனப்போராட்டத்தினால் இலங்கையில் எழுந்துள்ள நெருக்கடியையோ, அன்றி இரத்த ஆறு ஓடுவது பற்றியோ சிந்திக்கவில்லை.

இந்நிலையில் தமிழ் நல்லெண்ணத்தூதுக்குழுக்கள் தென்னிலங்கைக்கு செல்வதினால் பயன் ஏதும் ஏற்பட்டு விடப்போவதில்லை. வடக்கு கிழக்கில் தமிழ்மக்கள் படும் இன்னல்களையும், துயரங்களையும் கூட வெளியிடாத சிங்களப் பேரினவாதப் பத்திரிகைகள் தமிழர்களின் உரிமைகளைப்பற்றிப் பேசும் நல்லெண்ணக்குழுக்களின் கருத்துக்களையா சிங்கள மக்களுக்குச் சென்றடைய உதவப் போகின்றன.

யாழ்ப்பாணம் வரும் சகல நல்லெண்ணத்தூதுக் குழுக்களையும், விடுதலைப்புலிகளும் வரவேற்கின்றார்கள். மக்களும் வரவேற்கின்றார்கள். இதன் அடிப்படையில் பாராளுமன்றத் தெரிவுக்குழு யாழ்ப்பாணம் வருவதற்கும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு நல்லெண்ண முயற்சிகளை மேற்கொண்டு வரும் தூதுக் குழுக்களுக்குப் பத்திரிகைகளும் பெரும் முக்கியத்துவம் கொடுத்து செய்திகளையும், அவர்களின் கருத்துக்களையும் வெளியிட்டு வருகின்றன.

ஆனால், தென்னிலங்கையில் இவ்வாறானதொரு முக்கியத்துவம், தமிழ்ப் பகுதியில் இருந்து செல்லும் நல்லெண்ணத் தூதுக் குழுவிற்கு பேரினவாத சக்திகளிடம் கிடைக்க முடியுமா? சமாதானம் பேச முற்பட்ட தொண்டமானையே துரோகி என வர்ணிக்கும் நிலைக்கு வந்துவிட்ட சிங்களப் பேரினவாத சக்திகளிடம் இவற்றை எல்லாம் எதிர்பார்க்க முடியுமா?

அதாவது, காலாகாலமாக தமிழ் மக்கள் தமது பிரச்சினைகளைப்பற்றித் தென்னிலங்கையில் பல்வேறு மட்டங்களிலும் எடுத்து விளக்கியுள்ளார்கள். ஆனால், அவை சிங்கள மக்களை சென்றடைந்தனவா இல்லையா என்பதல்ல பிரச்சினை. அன்றும், இன்றும் தென்னிலங்கையில் சிங்களப் பேரினவாத சக்திகள் தமது நிலைப்பாட்டை மாற்றவில்லை என்பதே முக்கியமாகும். இந்நிலையில், தமிழ் நல்லெண்ணத்தூதுக் குழுக்களின் தென்பகுதி விஜயங்கள் நெருக்கடியை வளர்ப்பதற்கு உதவுமே ஒழிய புரிந்துணர்விற்கு இட்டுச் செல்லாது. ஆகையினால், நல்லெண்ணத்தூதுக் குழுக்களை வரவேற்கும் தமிழ்ப் பிரதேசங்களுக்கு நல்லெண்ணத்தூதுக் குழுக்கள் வந்து போவதே பொருத்தப்பாடு உடையதாகும்.

---

### "சிறிலங்கா விற்பனைக்கு"

# மக்கள் மயம் என்ற போர்வையில் தனியார் மயமாக்கும் திட்டங்கள்

சிறிலங்கா விற்பனைக்கு என்ற விளம்பரம் விரைவில் லண்டன், பரீஸ், அமெரிக்கா, ஜப்பான் நாடுகளில் வெளியாகும் எனமுன்னாள் அமைச்சர் காமினிதிசநாயக்க அண்மையில் தெரிவித்துள்ளார்.

இந்த ஒட்டு மொத்தமான விற்பனையையிட்டு கவலை தெரிவிக்கும் காமினி, பகுதி பகுதியாக சிறிலங்கா விற்பனையாகிக் கொண்டிருந்த போது பதவியிலிருந்தமையால் அதுபற்றி அவர் எதுவும் கவலைப்பட்டதாக தெரியவில்லை. எனவே இது பற்றி இவரின் கருத்து உண்மையாக இருந்த போதிலும் இந்தக் கருத்தை சொல்ல அவர் தகுதியுடையவரா என்பது கேள்விக்குரியதாகும்.

சிறிலங்கா அரச நிர்வாகத்தின் கீழ் இருந்த அமைப்புகள் பல தனியார் மயமாக்கப்பட்டுள்ளன. பல அமைப்புகள் மக்கள் மயம் என்ற போர்வையில் படிப்படியாக தனியார் மயமாக்கப்படமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் நிர்வாகம் மட்டும் தனியாரிடம் ஒப்படைக்கப்படபோவதாக அரசாங்கத்தால் அழுத்திக் கூறப்படும் பெருந் தோட்டத்துறையும் ''மறுசீரமைப்புக்கு உட்படுத்தப்படபோவதாக கூறப்படும் வங்கித்துறையும் தென்னிலங்கை அரசியலில் பலத்த வாதப் பிரதிவாதங்களை ஏற்படுத்தியுள்ளது.

சென்ற ஆண்டு அரசின் பொறுப்பிலிருக்கும் 22 பெருந் தோட்டங்களை நிருவகிப்பதற்கென வெளிநாட்டு உள்நாட்டு நிறுவனங்களிடம் விண்ணப்பங்கள் கோரப்பட்டன. இதற்கு நூற்றுக்கு மேற்பட்ட நிறுவனங்கள் விண்ணப்பித்திருந்தன

இவற்றில் இன்று தென்னிலங்கையில் பெருமளவில் பேசப்படும் நிறுவனங்களாக முருகப்பா கம்பனியும் மகாராஜா நிறுவனமும் காணப்படுகின்றன முருகப்பா கம்பனிஒரு இந்திய நிறுவனம் மகாராஜா நிறுவனம்ஏற்கனவேசிறிலங்காவின் பல்வேறு தொழில்கள் ஈடுபட்டுவரும ஒரு நிறுவனம் ஆகும் இவர்கள் காலத்துக்கு காலம் ஆளும் கட்சியின் பல்வேறு 'பணிகளுக்கும்' உதவி வருபவர்கள் என்பது தெரிந்த விடயமாகும்.

இந்த இரண்டு நிறுவனங்களும் தோட்டத் நிர்வாகத்தில் நுழைந்து விடக்கூடாது. என்பதில் தென்னிலங்கை அரசியல் வாதிகள் முனைப்பாக நிற்கின்றமையை அவற்றின் செயல்கள்வெளிப்படுத்தி வருகின்றன.

1970 இல் பதவிக்கு வந்த மக்கள் முன்னணி அரசாங்கம் தோட்டத்துறையை அரசுடைமை ஆக்கியபோது தோட்டங்களை நாட்டு மக்களின் பொறுப்பில் எடுத்துக் கொண்டு விட்டதாக கூறிக்கொண்டது. கடந்த இருபது வருடங்களாக நாட்டு மக்களின் கையிலிருந்த போதும் சிங்களமக்கள் தோட்டங்களில் தமது 'உரிமையை' நிலை நாட்ட தோட்ட தொழிலாளர்கள் பெரும் இடைஞ்சலாக இருக்கிறார்கள் என்பதே தென்னிலங்கை அரசியல் வாதிகளின் ஆதங்கமாக இருந்து வருகிறது.

இதனால்எந்த ஒரு 'தமிழர்' நிறுவனமும் இந்த விடயத்தில் நுழைந்து விடக்கூடாது என்பதில் அவர்கள் மிகுந்த கரிசனை காட்டி வருகின்றனர் இங்கு கட்சிக் கொள்கை, சித்தாந்த வேறுபாடு எதுவும் இருப்பதாக தெரியவில்லை

தோட்டங்களை நிர்வகிக்க என முருகப்பா கம்பனி விண்ணப்பித்திருக்கும் விடயம் முதன் முதலில் நவசமசமாஜ கட்சியின் பத்திரிகையிலேயே வெளிவந்தது. இது அந்தக் கட்சி இந்த விடயத்தில் கொண்டுள்ள நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருப்பதாக கொள்ளலாம்.

''ஆங்கிலேயர் தோட்டங்களில் வேலை செய்ய சீனர்களை கொண்டுவந்திருந்தால் இன்று தோட்டத்தொழிலாளர் பிரச்சினை இருந்திருக்காது''என நுவரெலியா மாவட்ட முன்னாள் பா.உ காமினி திசநாயக்கா தனது மனக்குமுறலை வெளியிட்டிருந்தார். அதாவது சீனரை இந்த நாட்டில் குடியேற்றியிருந்தால் பரவாயில்லை ஆனால் தமிழரை குடியேற்றியது மிகவும் தவறான காரியம் என்பது அவரின் கருத்தாக அமைந்திருக்கிறது.

கடந்த 20 வருட அரசுநிர்வாகத்தில் தோட்டத்தொழிலாளர்கள் பெரிதாக எதுவும் பெற்று விடவில்லை தனியார் நிருவாகத்தில்புதிதாக எதுவும் பெற்று வரும் என நம்பவும் இடமில்லை '2000 ஆம் ஆண்டில்யாவர்க்கும் புகலிடம்'' ஆனால் இந்த 'யாவர்க்கும்' என்பதில் தோட்டத் தொழிலாளர் அடங்குவார்களா என்பதுகேள்விக்குஉரியதுஆங்கிலத் துரை சிங்களத்துரை தனியார் துறை என தொழிலாளர் பல துறைகளை அவர்கள்கண்டுள்ளார்கள்எதுவாயிருப்பினும் அவர்களுக்கு ஒன்று தான் எனவே தமிழ் கம்பனிகளின் நிருவாகம் மட்டும் தொழிலாளர்களுக்கு மாற்றம் எதையும் தந்துவிடப் போவதில்லைத்தான் ஆனால் இந்த எதிர்ப்பில் சிங்கள அரசியல் வாதிகளின் மனப்பான்மை வெளிப்படுவதை காணலாம் எந்த எஜமானையும் ஏற்றுக்கொள்ள அல்லது எந்த அடிமையையும் ஏற்றுக் கொள்ள தயாராக இருக்கும் சிறிலங்கா அரசியல்வாதிகள் தமிழ் எஜமான்களையோ அல்லது தமிழ் அடிமைகளையோ ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்பதையே இக்கைய கருத்துகள் வெளிப்படுத்துகின்றன.

வங்கிகளின் 'மறுசீராக்கம்' என்பது இன்று சர்ச்சைக்குரிய மற்றுமோர் விடயமாக காணப்படுகிறது இந்தசர்ச்சையில் வங்கிகளை தனியார் மயமாக்குவதால் மக்களுக்கு அல்லது நாட்டுக்கு ஏற்படப்போகும் பாதகங்கள் பற்றி பெருமளவில் விவாதிக்கப்படவில்லை ஆனால் 'நிதியமைச்சுக்குள் புலிகளின் ஊடுருவல் உண்டு என்பதை தேசாபிமானத்துடன் ஏற்றுக்கொள்ள வேண்டும்' என வற்புறுத்தப்பட்டு வருகிறது

இங்கு புலிகள் என தமிழ் அரச அதிகாரிகள் குறிப்பிட்டிருக்கின்றனர் அதாவது அவர்கள் 'நாட்டிற்கும்' அரசாங்கத்திற்கும் விசுவாசமாக நடந்து கொண்டாலும் சந்தேகக் கண்கொண்டே நோக்கப்படுகின்றமையை காணக்கூடியதாக உள்ளது.

இன்று சிறிலங்காவில் வெளிநாட்டினர் இல்லாத துறையே இல்லை. வெளிநாட்டு வங்கித் துறையிலிருந்து சூதாட்ட குகைகள் வரை எல்லாத் துறைகளும் அன்னியர் மயம். அவர்கள் தமது மதுபானச் செலவில் இங்கு தேயிலைத் தோட்டபங்குகளை கூடவாங்குகிறார்கள் என கூறப்படுகிறது.

எனவே இந்த 'நாடு' எந்த மயமாகினாலும் தென்னிலங்கை அரசியல் வாதிகள் பொறுத்துக் கொள்வார்கள் ஆனால் தமிழ் மயமாவதை ஒருபோதும் பொறுக்க மாட்டார்கள் என்பதை இவர்களின் செயற்பாடுகள் உணர்த்தி வருகின்றன.

**வேலவன்**

---

### தமிழ்நாடு சட்டசபையில்

# ஜனதா தள் மீது காங்கிரஸ் உரிமை மீறல் குற்றச்சாட்டு

தமிழ்நாடு சட்டசபை எதிர்க்கட்சி தலைவர்எஸ்.ஆர் .பாலசுப்பிரமணியம் ஜனதா தள் சட்டசபை உறுப்பினர் எஸ்.குமாரதாஸ் மீது உரிமைமீறல் பிரச்சினையொன்றை சட்டசபையில் எழுப்பினார்.

வாரப்பத்திரிகையொன்றில் குமாரதாஸ் எழுதியகட்டுரையில் தன்னைப்பற்றியும்தனது கட்சி உறுப்பினர்களைப் பற்றியும் தவறானகருத்துக்கள் கூறப்பட்டிருப்பதாகவும் சபை நடவடிக்கை விபரங்கள் திரித்துக் கூறப்பட்டிருப்பதாகவும்தெரிவித்தார்.

இந்த உரிமை மீறலுக்கு குமாரதாஸ் அளித்தவிளக்கம் குற்றச்சாட்டுக்கு தொடர்புடையதாக இல்லை என்று தெரிவித்த சட்டமன்ற சபாநாயகர் சேடப்பட்டிமுத்தையா, விளக்கத்தை எழுத்து மூலம் அளிக்குமாறுகூறினார்.

இது பற்றிய தீர்ப்பை பின்னர் அளிப்பதாகவும் சேடப்பட்டி முத்தையா தெரிவித்தார்.

---

### தமிழக

வருவதாகக் குறிப்பிட்டார்

அத்துடன் தமிழக காவல் துறையை நவீன மயப்படுத்த சிறப்பு உதவியாக பத்துக் கோடி ரூபாய் மத்திய அரசினால் வழங்கப்பட்டதாக மேலும் தெரிவித்தார்.

முன்னதாக தமிழக முதல்வர் ஜெயலலிதாவை அவரது இல்லத்தில் சந்தித்து முப்பது நிமிட நேரம் மத்திய உள்துறை அமைச்சர் எம். எம். ஜேக்கப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

---

# நடேஸ்வரா மாணவர் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூரியில் கல்வி கற்று தற்போது தற்காலிகமாக வேறு இடங்களில் கல்விகற்கின்ற 1990, 1991, 1992, 1993, 1994 ஆம் ஆண்டிற்குரிய சகல க. பொ. த: உயர்தரவகுப்பு மாணவர்களையும் நாளை திங்கட்கிழமை நண்பகல் 12:30 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் ஒன்றுகூடுமாறு அதிபர் தெரிவித்துள்ளார்.

இந்த கலந்துரையாடலில் பரீட்சைக்கு விண்ணப்பித்தல், மாணவர் வருடாந்த ஒன்றுகூடல் மற்றும் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்தியாவின் வல்லாதிக்க போக்கை அமெரிக்கா அனுமதிக்க கூடாது

## இரகசிய அறிக்கையில் வற்புறுத்து

(வாஷிங்டன்)

தெற்காசியப் பிராந்தியத்தில் இந்தியா வல்லரசாகவும் முன்னணி இராணுவ நாடாகவும் மாறி வருவதை அமெரிக்கா தடுக்க வேண்டும், இவ்வாறு இப்போது அம்பலமாகியுள்ள அமெரிக்காவின் இரகசியத் திட்டம் ஒன்று கூறுகிறது.

இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள் வருமாறு;

இந்தியாவும் பாகிஸ்தானும் அணுவாயுதங்களை வைத்துக் கொள்ள முயற்சித்தால் அமெரிக்கா இந்த நாடுகளுக்கு எதிராக இராணுவ பலத்தைக்கூட உபயோகிக்கலாம்.

உலகில் அமெரிக்காவுக்குச் சவால்விட எந்த ஒரு நாடும் தோன்றக்கூடாது. அவ்வாறு தோன்ற அமெரிக்கா அனுமதிக்கக் கூடாது.

இதற்காக சுமார் 16 லட்சம் பேர்கொண்ட அமெரிக்க இராணுவத்திற்காக அமெரிக்கா இனி ஐந்து வருடங்களுக்கு 125 ஆயிரம் கோடி அமெரிக்க டாலர்களைச் (4 லட்சத்து 25 ஆயிரம் கோடி ரூபா) செலவளிக்கவும் திட்டமிட்டுள்ளது.

சோவியத்யூனியன் மறைந்து போனாலும், ரஷ்யவிடமிருக்கும் அணுவாயுதங்கள் மட்டுமே அமெரிக்காவுக்கு நாசம் விளைவிக்கும் வல்லமை கொண்டவை, மேலும் ரஷ்யாவின் அணுவாயுத நிலைகள்மீது தாக்குதல் நடத்த அமெரிக்கா முன்பேஜறிவைத்திருக்கும் அமெரிக்க அணுவாயுதத் திட்டங்களும் செயற்பாடுகளும் தொடரவேண்டும் அமெரிக்கா இவற்றைக் கைவிடக்கூடாது' ரஷ்யாவிடமுள்ள அணுவாயுதங்கள் அமெரிக்காவுக்கு நாசம் செய்ய இயலாது என்ற கட்டத்தை அடையும் வரை இது தொடரவேண்டும்

மேலும் ஐரோப்பிய நாடுகள் தாம் தமது பாதுகாப்பை அமெரிக்கா இன்றியே கவனிக்க முடியும் என்று குரல் கொடுக்கத் தொடங்கியுள்ளதால் அமெரிக்கா எச்சரிக்கையாக இருக்கவேண்டும். எனவே ஐரோப்பிய நாடுகள் கூட அமெரிக்காவுக்கு சவால் விடும் நாடுகளாக மாறிவிடும் என்பதால் ஐரோப்பாவிலிருந்து அமெரிக்கா தனது இராணுவத்தை வெளியேற்றவே கூடாது என்றும், அமெரிக்கா தலைமை வகிக்கும் நேட்டோ அமைப்பின் முக்கியத்துவத்தைக் குறைக்கும் எந்தச் செயலையும் அமெரிக்கா அனுமதிக்கக்கூடாது. எனவே ஐரோப்பாவை அமெரிக்கா எபபொழுதும் தன் கட்டுப்பாட்டிலேயே வைத்திருக்க வேண்டும்.

தென்கிழக்கு ஆசிய பிராந்தியத்தைப் பொறுத்தவரை அமெரிக்கா இராணுவத்தின் எண்ணிக்கையைக் குறைத்துக் கொண்டாலும் இப்பிராந்தியத்தில் இராணுவ பலத்தை நிலைநிறுத்த வேண்டும்.

ஜப்பான், கொரியா ஆகிய நாடுகள் கை ஓங்கி வரும் அபாயம் இருப்பதால், இந்த நாடுகளை இராணுவரீதியாக முன்னுக்கு வர அமெரிக்கா அனுமதிக்கக் கூடாது.

## வாகன விபத்தில் வயோதிபர் பலி

(யாழ்ப்பாணம்)

வயோதிபர் மீது வாகனம் ஒன்று மோதியதில் அவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார்.

நேற்றுக்காலை நல்லூர் ஆலய முன்றலிலுள்ள தேர் முட்டியில் அமர்ந்திருந்த திருநெல்வேலியைச் சேர்ந்த க. செல்லத்துரை (வயது 60) என்பவரே வாகனமொன்றினால் தாக்கப்பட்டு கொல்லப்பட்டவராவார். இவ்வேளை இவர் அருகிலிருந்த இருவர் மயிரிழையில் உயிர் தப்பினர். (ச)

### பெருந்தோட்டத்துறையில்

## மார்ச் 30 ஆம் திகதியன்று ஒரு நாள் வேலை நிறுத்தம்

### கூட்டுத் தொழிற் சங்க கமிட்டி

தோட்டத் தொழிற் சங்க கூட்டுக்கமிட்டி தோட்டங்கள் தனியார் மயமாதல், 1983ஆம் ஆண்டு வாழ்க்கைச் செலவுப் புள்ளி தொடர்பான சம்பள நிர்ணய சபையின் தீர்மானம் போன்ற விடயங்களை முன்வைத்து எதிர்வரும் 30 ஆம் திகதி ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்யவுள்ளதாக மேற்படி அமைப்பின் சார்பில் அதன் தலைவர் ஐயாத்துரை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது தோட்டங்களைதனியார்மயப் படுத்த அரசாங்கம் எடுத்த நடவடிக்கையை கண்டித்தும் தோட்டங்கள் தனியார் மயப் படுத்தலின் மூலம் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் அதிலிருந்து பாதுகாப்பளிப்பதற்காக தொழிற்சங்க தோட்ட நிர்வாகம், அரசாங்கம் இணைந்த கூட்டு ஒப்பந்தம் ஒன்றை செய்ய வலியுறுத்தியும் 1983 ஆம் ஆண்டு தேயிலை சம்பள நிர்ணய சபையில் வாழ்கைச் செலவுப் புள்ளி 418க்கு மேல் அதிகரிக்கும் ஒவ்வொரு புள்ளிக்கும் நாளொன்றுக்கு ஆறுசதவீதம் வழங்கப்படும் என்ற தீர்மானத்தை அமுல் படுத்தாததைக் கண்டித்தும்.

1989 — 1992 ஆம் ஆண்டு வரையான வரவு செலவுத் திட்டத்தில் அரச ஊழியருக்கு வழங்கப்பட்ட சம்பள உயர்வு தோட்டத்தொழிலாளர்களுக்கு இது வரை வழங்கப்படாமல் அவர்கள் புறக்கணித்து வந்துள்ளதை கண்டித்தும்.

இப்போது வாரத்தில் மூன்று நான்கு நாள் வேலை வழங்கப் படுகிறது இந்நிலையில் சம்பள அதிகரிப்பு எதுவித நன்மையையும் அளிக்காதெனவும் மாதத்தில் 25 நாட்கள் தொழில் வழங்கப்பட வேண்டுமென்பதையும் அமைச்சர் உறுதி செய்ய வேண்டும் என்பதையும் வலியுறுத்தியும் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்யவுள்ளதாக தோட்ட தொழிற்சங்க கூட்டு கமிட்டி தீர்மானித்துள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

### கிழக்கில்

லாவெளி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தினர் தலவாய் பகுதியை சுற்றிவளைத்தனர் இச்சுற்றிவளைப்பின் போது ஆண், பெண் வேறுபாடில்லாமல் சகல பொதுமக்களும் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டனர்.

பின்னர் சங்கரப்பிள்ளை மணியம்மா, அவரது மகள் கோமதி ஆகிய இரு பெண்களையும் மூன்று ஆண்களையும் முகாமிற்கு கொண்டு சென்றுள்ளனர்.

சித்தாண்டி மண்டூர்ப் பகுதிகளை நேற்று முன்தினம் சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் ஐந்து இளைஞர்களை கைது செய்து முகாமிற்கு கொண்டுசென்றுள்ளனர்.

### கரையை நோக்கி

பூநகரி, கல்முனைப் பகுதியில நிலை கொண்டுள்ள இராணுவத்தினரும் கடுமையான துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர். இதனால் மீன்பிடித் தொழில் கடுமையாகப் பாதித்துவருகிறது.

### மாணவர் மதிய

பால்மா தயாரிக்கப்படுகிறது என்றும், உள்ளூரில் உற்பத்தியாகும் ஏனைய பால்மாவகைகளில் இறக்குமதி செய்யப்பட்ட சில பொருள்கள் கலந்திருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

உணவு மற்றும் கூட்டுறவு அமைச்சர் வீரசிங்க மல்லிமராச்சியின் வேண்டுகோளை அடுத்தே அமைச்சரவை இந்த அனுமதியை வழங்கியது.


## மரண அறிவித்தல்

### கணபதிஐயர் கனகச்பாபதிக் குருக்கள்

முரசுமோட்டையைச் சேர்ந்த கணபதிஐயர் - கனகசபாபதிக்குருக்கள் 13 - 03 - 92 வெள்ளிக்கிழமை காலமானார். இவர் அழகம்மாவின் அன்புக்கணவரும், நாகபூசணி, கமலாதேவி, ரகுநாதசர்மா, காந்தி, கிருஷ்ணநாதசர்மா ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று சனிக்கிழமை மாலை இடம் பெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :

(2298) க. ரகுநாதசர்மா


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 - ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.

### உலக கிண்ண கிரிக்கட்

## அவுஸ்ரேலிய அணி வெற்றி

நேற்று நடைபெற்ற உலக கிண்ண கிரிக்கட் போட்டியில் அவுஸ்ரேலியா, சிம்பாவேயை 128 ஓட்டங்களால் தோற்கடித்தது. அவுஸ்ரேலிய அணி 46 ஓவர்களில் ஆறு விக்கட் இழப்பிற்கு 265 ஓட்டங்களைஎடுத்தது. சிம்பாவே அணி 41 4 ஓவர்களில் 137 ஓட்டங்களைப பெற்றது.

இன்றையபோட்டியில் தென்னாபிரிக்க அணி இந்திய அணியை எதிர்த்து விளையாடும்.

## கிழ. மின். சபை அலுவலகம் அம்பாறைக்கு மாற்றம்

திருமலையில் இயங்கி வரும் இலங்கை மின்சார சபையின் கிழக்கு பிராந்திய அலுவலகத்தை அம்பாறைக்கு இடமாற்ற அரச தரப்பில் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக தெரிய வருகிறது.

இது தொடர்பாக மின்சக்தி எரிபொருள் அமைச்சரைச் சந்தித்தவர்கள் இந்த அலுவலகத்தை இடம்மாற்றும் அவசியம் இருந்தால் மட்டக்களப்புக்கு மாற்றும்படியும், அல்லது திருமலையிலேயே தொடர்ந்து இயங்க ஆவன செய்யும்படியும், அம்பாறைக்கு இடமாற்ற எடுக்கப் படும் முயற்சிக்கு எதிர்ப்பு தெரிவிப்பதாகவும் அமைச்சரிடம் எடுத்துக் கூறியுள்ளனர்.

### வெளிநாட்டு நாணயமாற்று

## தேயிலை விலை வீழ்ச்சியை பாதிக்கமாட்டாது

### - நெவில் கருணாதிலக்கா

(கொழும்பு)

வெளிநாட்டு நாணய மாற்றை முக்கியமாக சம்பாதித்துத் தரும் பண்டமாக இப்போது தேயிலை இல்லை இதனால் தேயிலையின் விலை வீழ்ச்சியினால் இலங்கையின் வெளிநாட்டு நாணயமாற்று பாதிக்கப்படவில்லை என்று மத்தியவங்கி ஆளுனர் நெவில் கருணாதிலக்க கூறியுள்ளார்.

செய்தியாளர்களிடம் அவர் பேசுகையில் மேலும் கடந்த ஆண்டிலும் பார்க்க இந்த வருடம் வெளிநாட்டு நாணயம் இலங்கைக்கு கூடுதலாகக் கிடைப்பதாகவும், வெளிநாட்டு நாணய மாற்று ஒதுக்கீடு நாளாந்தம் அதிகரித்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

### நாணய பரிவர்த்தனை

## கட்டுப்பாடு தளர்வு டொலர் வருகை அதிகரிக்கும்

இலங்கையின் மத்திய வங்கி கடந்த ஜனவரி இரண்டாம் திகதி முதல் நாணய பரிவத்தனை கட்டுப்பாடுகளைத் தளர்த்தியதன் விளைவாக டாலர்கள் மிதக்கவிடப்படலாம் என்று வங்கித் தொழில் நிதிச்சந்தை மற்றும் நிதித்துறை வட்டாரங்களில் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜனவரி முதல் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளதால் டாலர்களை வாங்குவதற்கும். விற்பதற்குமான இடைவெளி நானூற்று முப்பது சதம் வரை உயர்ந்துள்ளது இதனால் இறக்குமதி செய்யப்படும் நுகர் பொருட்களின் விலைகளும் உயரலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

### யாழ். மாவட்ட

## விளையாட்டு அபிவி. குழு வலி. தெற்கு போட்டிகள்

யாழ். மாவட்ட விளையாட்டு குழுவினால் நடாத்தப்படும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் வலிகாமம் தெற்கு பிரிவில் இன்றைய போட்டியில் யாழ் பல்கலைக்கழக அணியை எதிர்த்து வளர்மதி அணி மோதும் பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் பி. ப. 3. 00 மணிக்கு போட்டி ஆரம்பமாகும்.

வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் வலிகாமம் தெற்குப் பிரிவில் தெல்லிப்பளை கிறாஸ் கொப்பர்ஸ் அணி இராமநாதன் கல்லூரி அணியை எதிர்த்து விளையாடும். இப்போட்டி சுன்னாகம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் பி. ப. 4. 30 மணிக்கு இடம்பெறும் பி. ப. 3 00 மணிக்கு இடம் பெறும் மற்றுமொரு போட்டியில் நவாலி முரசெலி அணியை எதிர்த்து சங்கானை சிகப்பிரகாச அணி மோதும்.

நேற்று நடைபெற்ற விறுவிறுப்பான உதை பந்தாட்ட போட்டியில் பாடும்மீன் அணி 2: 1 என்ற கோல் அடிப்படையில் ஊரெழு றோயல் அணியை வெற்றிபெற்றது இப் போட்டிக்கு வேதாபரணம் அவர்கள் நடுவராக கடமையாற்றினார்

### சாட்சியம்

பில் சில சாட்சியங்களைப் பதிவு செய்யுமாறு சிறிலங்கா நீதி மன்றம் ஒன்றைக் கோரியிருப்பதாக தெரியவருகிறது. லெட்டர் றொக்கட்டரி முறையிலான இக் கடிதத்தில் கோரப்பட்டுள்ளவை பற்றி சட்டமா அதிபர் திணைக்களம் ஆராய்ந்து வருகின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது.

## துருக்கியில் பூமியதிர்ச்சி

துருக்கியில் ஏற்பட்ட பூமி அதிர்ச்சியினால் 500க்கு மேற்பட்டோர் பலியாகினர் என அஞ்சப்படுகிறது. பாடசாலை கட்டடம் ஒன்று இடிந்து வீழ்ந்ததினால் 169 மாணவர்கள இடிபாட்டிற்குள் சிக்கிக் கொண்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 60 ஆண்டுகளில் துருக்கியில் ஏற்பட்ட மிக மோசமான பூமியதிர்ச்சி இது என சொல்லபபடுகிறது.

### உணவுப்

தாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி கிலோ அரிசி பதினைந்து ரூபாவாகவும் மா பதின்மூன்று ரூபா ஐம்பது சதமாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (ச)